## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் இலங்கை தேசிய சபையின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, சபையின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்-கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என

முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பெனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து சபையின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை சபையால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும

### 1.5.2 இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை பொது துறை கணக்கீட்டு தரநியமம் 01 இல் 99 பந்தி பிரகாரம் காலப் பகுதிகள் அடையாளம் காணப்பட்ட எல்லா வருமானம் மற்றும் செலவின உருப்படிகள் இலாபம் அல்லது நட்டங்க-ளில் உள்ளடக்கப்படுதல் வேண்டுமாயி-னும், சபையால் செயற்படுத்தப்படும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்ட-ங்களின் பொருட்டு கிடைக்கப்பெற்ற ரூபா. **14,693,000** ஆன வருமானம் மற்றும் மற்றும் அதில் செலவிடப்பட்ட ரூபா. **15,364,900** ஆன செலவினம் தொடர்பான விபரங்கள் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்படாது ரூபா.671,900 ஆன தேறிய பெறுமதி மட்டும் மீளாய்விற்கான ஆண்டில் நிதிக் கூற்றுகளில் வருமான-ங்களின் கீழ் எதிர்மறை பெறமதியாக குறிப்பிடப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் இது தொடர்பாக செவ்வை-யான தகவல்களை அறிக்கையிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | இலங்கை பொது துறை கணக்கீட்டு தரநியமங்களின் படி நிதிக் கூற்றுகளை தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொது துறை கணக்கீட்டு தரநியமம் 20 பிரகாரம், புலனாகாத சொத்துக்களின் நிதி நிலைமை கூற்றில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் புறம்பாக காட்டப்படுதல் வேண்டுமாயினும், தேறிய பெறுமதி ரூபா. **324,653** ஆன கணினி மென்பொருள் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டிருக்க-வல்லை. | இணங்கப்படுகிறது. எதிர்வரும் ஆண்டுகளில் கணக்குகளை தயாரிக்கு-ம்போது நியமங்களுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | இலங்கை பொது துறை கணக்கீட்டு தரநியமங்களின் படி நிதிக் கூற்றுகளை தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| க.அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கடந்த ஆண்டில் ஆலோசகர் ஒருவருக்கு செலுத்தும் பொருட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா. **250,000** ஆன தொகை காலம் கடந்ததாக சீராக்காது மீளாய்விற்கான ஆண்டின் பல்வேறு வருமானமாக கணக்கிடுதல் மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் பொருட்டு வெளியக நிறுவனங்கள் இரண்டில் பெற்றுக்கொண்ட ரூபா. **900,000** ஆன தொகை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தாமை காரண-மாக செலுத்தப்பட வேண்டிய செலவினமாக காட்டப்படுவதற்குப் பதிலாக மீளாய்விற்கான ஆண்டின் வருமானமாக காட்டப்படுதல் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை ரூபா. **1,150,000** ஐ குறைவாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். | வருமானம் செலவினம் செவ்வையாக அடையா-ளம் காணப்பட்டு கணக்-கிடுதல் வேண்டும். அதேபோன்று ஏற்பட்டு-ள்ள கணக்கீட்டு குறை-ப்பாடுகளை செவ்வை-யாக்குவதற்கு நடவடிக்-கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ)மீளாய்விற்கான ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா.**96,687** ஆன பணிக்கொடை தொகையானது, பணிக்கொடை ஒதுக்கீட்டு கணக்கில் பற்று வைப்பதற்குப் பதிலாக ஆண்டின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டதன் காரணமாக நிதிக் கூற்றுகளில் ஆண்டின் பற்றாக்குறை அதிகமாக காட்டப்பட்டிருந்தது. அதேபோன்று மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக பணிக்கொடை ஒதுக்கீடு கணக்காய்வின் கணிப்பீடு பிரகாரம் ரூபா. **2,999,559** ஆக இருப்பினும், நிறுவனத்தின் கணிப்பீடு படி அப் பெறுமதி ரூபா. **3,227,167** ஆகியதால் ரூபா. **227,608** ஆன மிகை ஒதுக்கீடு அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன். | ஆண்டில் செலவுகளை சரியாக கணக்கிடுதல் வேண்டுமென்பதுடன். பணிக்கொடை ஒதுக்கீடு-களை செவ்வையாக கணக்கிடல் வேண்டும். அதேபோன்று ஏற்பட்டு-ள்ள கணக்கீட்டு குறை-ப்பாடுகளை செவ்வை-யாக்குவதற்கு நடவடிக்-கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ)மீளாய்விற்கான ஆண்டில் வழங்கப்பட்ட ரூபா.**130,000** ஆன காசோலை ஆண்டில் இரத்துச் செய்யப்பட்டிருப்பினும், அந்தப் பொறுப்பினை மீண்டும் கணக்குகளில் காட்டப்படாமை காரணமாக மீளாய்விற்-கான ஆண்டில் நடைமுறை பொறுப்புகள் மேற்படி அளவில் குறைவாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். | இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளை சரியாக கணக்கு வைக்-கப்படுதல் வேண்டுமென்-பதுடன், ஏற்பட்டுள்ள கணக்கீட்டு குறைப்பாடு-களை செவ்வையாக்கு-வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.5.4 தீர்க்கப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | நிதிக் கூற்றுகளின் படி பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கைகளின் படி பெறுமதிகள் | வேறுபாடு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ)தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் | **4,484,257** | **4,988,000** | **103,743** | நிறுவனத்திடமுள்ள தகவல்களின் படி கணக்கீடுகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல ஆண்டு-களாக இருந்து வரும் வேறுபாடு-களை தெளிவுபடுத்த இயலாதுள்ளது. | நிதிக் கூற்றுகளை தயாரிக்கும்போது நிலையான சொத்து-க்களின் பதிவேடு மற்றும் பேரேடு கணக்குகள் என்பவ-ற்றுக்கிடையில் ஒப்-பிடப்பட்டு சரியான தகவல்களை அறிக்-கையிடல் வேண்டும். |
| (ஆ) வாகனங்கள் | **15,227,342** | **14,530,900** | **806,542** | நிறுவனத்திடமுள்ள தகவல்களின் படி கணக்கீடுகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல ஆண்டு-களாக இருந்து வரும் வேறுபாடு-களை தெளிவுபடுத்த இயலாதுள்ளது. | நிதிக் கூற்றுகளை தயாரிக்கும்போது நிலையான சொத்து-க்களின் பதிவேடு மற்றும் பேரேடு கணக்குகள் என்பவ-ற்றுக்கிடையில் ஒப்-பிடப்பட்டு சரியான தகவல்களை அறிக்-கையிடல் வேண்டும். |

**1.6 தகவல் தொழில்நுட்பம் (IT) பொதுக் கட்டுப்பாட்டு முறைகள்**

| க.அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மனித வளங்களின் அபிவிருத்தி சபையால் தமது கணக்கீட்டு செயற்பாடு பொருட்டு " Quick Book " கணக்கீட்டு மென்பொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்காக உரிய உள்ளக நிருவாக முறைமை தாபிக்கப்படாமை காரணமாக நிதிக் கூற்றுகள் அனுமதியின் பின்னர் ஏற்புடைய பேரேடு கணக்குகளின் பொருட்டு மீண்டும் சீராக்குதல்களை உள்ளடக்குவதற்கும் தற்போதுள்ள சீராக்குதல்களை அகற்றுவதற்கும் ஆற்றல் இருந்தது. அதேபோன்று இந்த கணக்கீட்டு மென்பொருள் படி கணக்கு ஆண்டின் இறுதியில் மீதிகளை தன்னியக்கமாக முன்கொண்டு செல்லப்படவில்லை என்பதுடன், எதிர் வரும் ஆண்டுக்கு ஆரம்ப மீதி மீண்டும் உள்ளடக்குதல் ( Manually) மேற்கொள்ள கூடியதாக இருந்தது. அதன்படி, நிதிக் கூற்றுகளில் ஒப்பீட்டு அளிவலான தகவல்களில் செவ்வைத் தன்மை தொடர்பாக உறுதிப்படுத்தல் இருக்கவில்லை. | இணங்கப்படுகிறது. உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் புதிய கணக்கீட்டு மென்பொருளுக்கு மாறுதல் கஷ்டமாகும். எதிர்வரும் ஆண்டுகளில் கவனத்தில் கொள்வதற்கு இணங்குகின்றேன். | கணக்கீட்டு முறைமையின் ஊடாக பிழைகளும் மோசடிகளும் ஏற்படாத வகையில் கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்தல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. **1,852,255** ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் மிகை ரூபா. **5,596,047** ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. **7,448,302** வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| க.அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் இலங்கை தேசிய சபை சட்டத்தில் **14 (1) (2)** பந்தி படி சபையின் கடமைப் பொறுப்புகள் மற்றும் அந்த கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றும் போது நிருவாகம், கல்வி, சேவையில் ஈடுபடல், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், | **2015** ஆம் ஆண்டில் அப் போதிருந்த அரசாங்கத்தின் நோக்குகை படி "எதிர் காலத்திற்கு தயாரான தொழிற்படை" என்ற நோக்கின் கீழ் சபையின் எதிர்வரும் ஐந்தாண்டு திட்டத்தில் இந்த எல்லா | சபை ஆரம்பிக்கப்-பட்டதன் நோக்க-ங்கள் நிறைவேறு-கின்ற வகையில் எதிர் பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறை-ப்படுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உரித்துகள் மற்றும் சனத்தொகை போன்ற விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும், ''எதிர் காலத்திற்கு தயாரான தொழிற்படை என்ற நோக்கின் கீழ் இந்த நிறுவனம் நடைமுறைப்படுதல் மற்றும் மீளாய்விற்கான ஆண்டின் செயற்பாடு தொடர்பாக கவனத்தில் கொள்கையில் மேற்படி விரிவான துறை உள்ளடங்கும் வகையில் நீண்டகால நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந்த சபை நடைமுறைப்படவில்லை என்று அவதானிக்கப்பட்டது. | விடயங்களும் உள்ளடங்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான திட்டங்களை தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்காக தற்போது இரண்டு வளப்பகிர்வாளர்களின் சேவை பெற்றுக்கொண்டு புதிய அரசாங்கத்தின் ''சுபீட்சத்தின் நோக்கு'' கொள்கை படி மனித வளங்கள் அபிவிருத்தி கொள்கை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் இலங்கை தேசிய சபை சட்டத்தில் **16 (2) (ஈ)** பந்தி படி மனித வள அபிவிருத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கி தரவு வங்கி தாபித்து பேணிச் செல்லும் அதிகாரம் சபைக்குரியதாக இருப்பினும், சபையின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு இலகுவான வகையில் தேவையான தகவல்களை உள்ளடக்கி இற்றைப்படுத்திய தரவு வங்கி பேணிச் செல்வதற்கு மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இணங்குகின்றேன். **2020** ஆண்டு தொடக்கம் மனித வளங்கள் அபிவிருத்தி தொடர்பாக தரவு முறைமையினை தாபித்து பேணிச் செல்வதற்கு தேவையான அடிப்படை கலந்துரையாடல் **ICTA** நிறுவனத்துடன், **2020.09.28** ஆந் திகதி நடாத்தப்பட்டதுடன், எதிர்கால நடவடிக்கைகள் நிறுவனத்தின் குறுகியகால, இடைக்கால மற்றும் நீண்டகால திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | சபை ஆரம்பிக்கப்-பட்டதன் நோக்க-ங்கள் நிறைவேறு-கின்ற வகையில் எதிர் பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறை-ப்படுத்தல் வேண்டும். |

**4. கணக்கீட்டு நடவடிக்கைகள் மற்றும் நள்ளாளுகை**

**4.1 நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல்**

| க.அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| **2003** யூன் 02 ஆந் திகதிய பீஈடி **/12** ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையில் **6.5.1** பிரிவு மற்றும் 2004 பெப்ருவரி 24 ஆந் திகதிய **01/2004** ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை பிரகாரம், கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுகளை கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமாயினும், சபையால் மீளாய்விற்கான ஆண்டில் நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல் 2020 ஆகஸ்ட் 10 வரை தாமதப்படுத்தப்பட்டிருந்தது. | கட்டுப்பாட்டுச் சபையால் உறுப்பினர்களை நியமனம் செய்தல் **2020.03.04** ஆந் திகதி வரை தாமதப்படுத்தல் மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட கோவிட் 19 தொற்று நிலைமை காரணமாக 2020 ஆண்டுக்காக முதலாவது கட்டுப்பாட்டுச் சபை கூட்டம் **2020.07.16** ஆந் திகதி நடாத்தப்பட்டது. அதன் பின்னர் அந்த கூட்டத்திற்கு ஏற்புடையதான அறிக்கை தயாரித்து முடிவடைந்த பின்னர் நிதிக் கூற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நிதிக் கூற்றுகளை உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 4.2 வருடாந்த செயற்றிட்டம்

| க.அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| **2015** நவம்பர் 06 ஆந் திகதிய **DPMM/DG/037** ஆம் இலக்க தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடி-க்கை அமைச்சு செயலாளரின் கடிதம் மூலம், அரசாங்க நிறுவனங்களால் தமது இலக்குகளை அடைந்துக் கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டிய முன்னு-ரிமை துறைகளை அடையாளம் காணப்-பட்டு அவற்றின் முடிவுகள் **(output)** மற்றும் விளைபயனை **(outcome)** அளவிட முடியுமானவாறு அடிப்படை செயலாற்றுகை சுட்டிகளை தாபிப்பதற்கும், அதன்படி தொடர்ச்சியாக செயலாற்றுகையை அளவிட முடியுமானவாறு தாபனத்துடனான பெறுபேறு சட்டகமொன்றை **(Organiza-tional results frame work)** தயாரிப்பதற்காக வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆயினும் மீளாய்விற்கான ஆண்டின் முடிவிலும் சம்பந்தப்பட்ட பணியை உரியவாறு மேற்கொள்வதற்கு சபைக்கு இயலவில்லை. | முறையான வகையில் செயற்றிட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும், மீண்டும் அமைச்சினால் வழங்கப்பட்ட புதிய படிவம் படி தயாரிக்கப்பட்ட செயற்-றிட்டத்தின் பெறுபேறுகள் நிரல் உள்ளடக்கப்படவில்லை. ஆகை-யால் அமைச்சினால் வழங்கப்பட்ட படிவம் படி தயாரிக்கப்பட்டமையால் இவ்வாறு ஏற்பட்டுள்ளது. மேலும் செயற்றிட்டத்தில் நோக்கு **(vision, Mission)** உள்ளடக்கப்படவில்லை எனிலும், 2015 ஆம் அண்டு தொடக்கம் எல்லா நிகழ்ச்சிகளை-யும் அப்போது ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கத்தின்கீழ் எதிர்கால தொழிற்படை என்ற நோக்கின் பிரகாரம் பிரதான **trust area 5** இற்கு அமைவாக எல்லா செயற்பாடுக-ளையும் வரிசைபடுத்தி நடைமுறை-ப்படுத்தப்பட்டது. | நிறுவனத்தை ஆர-ம்பிக்கும் நோக்-கங்கள் மற்றும் தேசிய கொள்கை-கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையும் வகையில் எதிர்-கால நோக்குடன் செயற்றிட்டம் மீது நிறுவனத்தை செயற்படுத்தல் வேணடும். |